S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் நவம்பர் 11 * 2025 * மலர் -1 * இதழ்-163* VOL-1 * ISSUE-163 விலை ரூ.3 * பக்கம் -4

## மூத்த குடிமக்களை பராமரிக்க

# தமிழகத்தில் 25 இடங்களில் 'அன்புச் சோலை' மையம்!

## திருச்சியில் முதலமைச்சர் மு..க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!!






புதுக்கோட்டை, நவ. 11–

திருச்சி, தஞ்சை உள்பட 25 இடங்களில் மூத்த குடிமக்களின்நல்வாழ்வுக்காக அன்புசோலைதிட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார். முன்னதாக புதுக்கோட்டை அரசு விழாவில் ரூ.767 கோடியில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்துவைத்துநலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் 2 நாட்கள் சுற்றுப்பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு திருச்சி வந்தார். திருச்சி விமானநிலையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் திருச்சி டிவிஎஸ் டோல் கேட்டில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கி ஓய்வு எடுத்தார்.

பின்னர் இன்று காலையில் திருவரங்கம் எம்.எல்.ஏ. பழனியாண்டி மகன் விஜயபாரதி – மனிஷா திருமணத்தை திருச்சி சோமரசம் பேட்டை கலைஞர் திடலில் நடந்த விழாவில் தலைமை தாங்கி நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ. பழனியாண்டி வரவேற்றார். விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்ட செயலாளர்கள் வைரமணி, காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர்கள் மேயர் அன்பழகன், மதிவாணன் மற்றும் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கீரனூரில் விழா

பின்னர் திருமணத்தை முடித்து விட்டு புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அருகே களமாவூர் மூகாம்பிகை என்ஜினீயரிங் கல்லூரி திடலில் நடைபெறும் அரசு விழாவிற்கு சென்றார். அங்கு நடந்த பிரமாண்ட அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு ரூ.767 கோடியில் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து 44 ஆயிரத்து 093 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளைவழங்கி சிறப்புரை ஆற்றினார்.

விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, மெய்யநாதன், மாவட்ட கலெக்டர் அருணா, மாவட்ட தி.மு.க. செயலாளர் செல்லபாண்டியன், புதுக்கோட்டை எம்.எல்.ஏ. முத்துராஜா, மாவட்ட கவுன்சிலர் துவரவயல் செல்வம், ஒன்றிய செயலாளர்கள் கே.ஆர்.என். போஸ், குளவாய்ப்பட்டி சண்முகம், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி, துணை மேயர் லியாகத் அலி, மற்றும் குன்றாண்டார் கோவில் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஓ.எஸ். வெங்கடாசலம், குளத்தூர் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஒ. எஸ். வி. அமுதாராணி, குன்றாண்டார் கோவில் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஒ.எஸ்.வி. மதன் கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் மா.தமிழ் அய்யா, கறம்பக்குடி வடக்கு ஒன்றிய உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற ஒன்றிய தலைவர் ஒடப் விடுதி ராஜாராம், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளரும், அறந்தாங்கி நகர் மன்ற துணைத் தலைவருமான முத்து, அறந்தாங்கி நகர திமுக செயலாளர் ராஜேந்திரன், உள்பட திரளான தி.மு.க. நிர்வாகிகள்மற்றும்பொது மக்கள் கலந்து கொண்டனர். அரசு விழாவில் நலத்திட்டங்களை விளக்கும் வகையில் முதலமைச்சர் ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை வரவேற்கும் விதமாக பிரமாண்டமாக நுழைவுவாயில் அமைக்கப்பட்டிருந்தது.



விழாவை முடித்துக் கொண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் திருச்சி வந்தார். திருச்சி திருவெறும்பூர் தொகுதி பொன்மலைப்பட்டியில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வுக்காக அன்புசோலை திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த விழாவில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கலெக்டர் சரவணன், மற்றும் திரளான பொதுமக்கள், தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

அன்புச்சோலை திட்டம் 2025–26ம் ஆண்டுக்கான பட்ஜெட்டின்போது மூத்த குடிமக்களுக்காக புதிதாக 'அன்புச்சோலை' திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதற்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுதமிழகம்முழுவதும் 25 அன்புச்சோலை மையங்கள் அமைக்கப்படும் எனஅரசு அறிவித்தது.

அதன்படி, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் தலா 2 மையங்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் தண்டையார் பேட்டை, சோழிங்கநல்லூர், விருகம்பாக்கம் ஆகிய இடங்களிலும், ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும் இந்த மையங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டது. மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக வீடுகளில் உள்ள முதியவர்கள் சோர்வடையாமல் ஊக்கம் பெற உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'அன்புச்சோலை' திட்டத்தை நிறைவேற்றும் வகையில் திருச்சி திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பொன்மலைப்பட்டி எம்.ஜி.ஆர். நகரில் புதிதாக முதியோர் மனமகிழ் வள மையம் எனும் 'அன்புச்சோலை மையம்' ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா இன்று (திங்கட்கிழமை) திருச்சியில் நடந்தது. முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், விழாவில் பங்கேற்று 'அன்புச்சோலை' திட்டத்தை தொடங்கி வைத்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள முதியோர் மனமகிழ் வள மையத்தை திறந்து வைத்தார்.

# எஸ்ஐஆர் என்றால் திமுக பதறுவதும், அலறுவதும் ஏன்

## அ.தி.முக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கேள்வி?



கோவை நவ.11

ஒரு வாரத்துக்கு முன்பு கோவை விமான நிலையம் பின் புறம் ஆண் நண்பருடன் பேசிக் கொண்டு இருந்த போது ஆண் நண்பரை தாக்கி விட்டு போதை ஆசாமிகள் அவரைதூக்கி கொண்டு பாலியல் வன்கொடுமை நடந்து உள்ளது.மிகப்பெரிய அதிர்ச்சியை அளிக்கிறது.

காவல் துறையினர் கண்டு அச்சமில்லாமல் குற்றம் புரிபவரக்ள் நடந்து கொள்கின்றனர். திண்டிவனம் பகுதியில் மாணவியை காவலர் பாலியல் வன்கொடுமை செய்து உள்ளார்.மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு பதில் இந்த சம்பவம் நடந்து உள்ளது.காவல்துறை ஒன்று தமிழகத்தில் இருக்கிறதா பாதுகாப்பு அளிக்கிறதா என்ற நிலைதான் இருக்கிறது.சமூக நலத்துறை அமைச்சர் பாலியல் வன்கொடுமை 6995 சிறுமிகள் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் அதற்கு 104 கோடி நிவாரணம் வழங்கப்பட்டதாக ஒப்புக்கொண்டுள்ளார். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அடியோடு இலலாத நிலை இருக்கிறது. போதைபொருள் அதிகரித்துள்ளது போதை ஆசாமிகளால் இந்த சம்பவங்கள் நடக்கின்றன.நிரந்தர டிஜிபி இன்னும் நியமிக்கப்படவில்லை வேண்டப் பட்டவர் வர வேண்டும் என்பதற்காக நிரந்தர டிஜிபி நியமிக்கவில்லை.

டி.ஜி.பி நியமனத்தில் இந்த அரசு முறையாக விதிகளை பின்பற்ற வில்லை.யு பி எஸ் சி 3 பேரை தேர்ந்தெடுத்து அனுப்பியும் டி.ஜி.பி நியமனம் செய்யப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தில் தனிநபர் வழக்கு தொடரப்பட்டு மூன்று வாரத்தில் பதிலளிக்க உத்தர விட்டு உள்ளது.

வாக்காளர் திருத்தம் திட்டம் கொண்டு வரப்பட்டு வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

வாக்காளர்கள் பட்டியலில் இறந்தவர்கள் இடமாற்றம் ஆனவர்கள் பெயர்கள் தொடர்கிறது.வாக்காளர் திருத்தம் திட்டம்ஸஎன்றாலே பதறுகிறார்கள் ஏன் பதறுகிறார்கள்.

இதில் காலதாமதம் ஏற்பட வாய்ப்பில்லை.ஒரு மாதம் என்பது போதுமானதாகும்.இறந்தவர்கள் நீக்கப்படக்கூடாது என்பது திமுகவின் நோக்கமாக இருக்கிறது.அப்படி நீக்கம் செய்யப்பட வில்லை என்றால் தேர்தலின் போது திருட்டு ஓட்டு போட வசதியாக இருக்கிறது.கள்ள ஓட்டு போடுவதை தடுக்கப்படும் என்பதால்

அதுதான் இவர்களுக்கு பயம். வாக்குகள் பறிபோகும் என அச்ச உணர்வை மக்கள் மத்தியில் ஏற்ப்படுத்த முயல்கின்றனர்.எனவே திட்டமிட்டே மக்க்க்ஷளை குழம்புகின்றனர். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.ஈரோட்டில் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு இடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அவர்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளது. எஸ்ஐஆர் என்றால் ஏன் பதறுகின்றார்கள் ஏன் அலறுகின்றார்கள் என கேள்வி எழுப்பினார். பாக முகவர்கள் தான் படிவங்களை கொடுக்க வேண்டும் வாங்க வேண்டும் ஆளும் கட்சியினர் தலையிடுவதால் உண்மையான வாக்காளர் பட்டியல் உருவாக்க முடியாது.அதிமுகவில் குடும்ப ஆட்சி என யாராவது சொல்லியுள்ளார்கள் ?

செங்கோட்டையன் வேண்டுமென்றே குற்றம் சாட்டுகிறார்.நிதியே ஒதுக்காமல் தி.மு.க திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுக்கின்றனர். என ஆளும் திமுக மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கூறியுள்ளார்.



தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு விடுமுறை தினமான நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை புரிந்தனர். அவர்கள் நீர்வீழ்ச்சியில் குளித்தும், காவிரி ஆற்றில் பரிசல் பயணம் செய்தும் இயற்கை அழகை கண்டு ரசித்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமை, தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் முனைவர்.திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, நேரில் பார்வையிட்டு 189 பயனாளிகளுக்கு ரூ.9 இலட்சத்து 64 ஆயிரத்து 250 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு நல வாரிய அட்டைகளை வழங்கினார்.இன்று நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாமில் 1,523 நபர்கள் மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

# வாணியம்பாடி ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆண்டு விளையாட்டு விழா!

**வாணியம்பாடி,நவ.11**

திருப்பத்தூர் மாவட்டம் ஆதர்ஷ் மெட்ரிக் மேல் நிலை பள்ளி ஆண்டு விளையாட்டு விழா பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.




விழாவுக்கு பள்ளி தாளாளர்டாக்டர்செந்தில்குமார் மற்றும் வாணி செந்தில் குமார் ஆகியோர் தலைமை வகித்து விழாவினை தொடங்கி வைத்தனர். பள்ளி தாளாளரின் செயலாளர் எஸ்.கே. ஷபானா பேகம் முன்னிலை வகித்தார். பள்ளி நிர்வாக முதல்வர் சத்திய கலா அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக மாநில கிரிக்கெட் வீராங்கனை சாரதி பிரியா கலந்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: விளையாட்டுகள் மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியம். இது ஒழுக்கம், குழுப்பணி மற்றும் விளையாட்டு வீரர் எனும் உணர்வை ஊட்டுகிறது என்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

விழாவின் தொடக்கமாக, ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டு, தேசியக் கொடி, ஒலிம்பிக் கொடி மற்றும் பள்ளியின் கொடி ஆகிய கொடிகள் ஏற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மாணவர்களின் கண்கவர் அணிவகுப்பு நடைபெற்றது, இது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. தொடர்ந்து மாணவர்களுக்கு இடையே ஓட்டப்பந்தயம், கபடி, கையுந்துபந்து உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. இதில் மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தினர். மேலும், மாணவர்களின் கலைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்மற்றும்பள்ளிதாளாளர் செந்தில் குமார் ஆகியோர் பதக்கங்கள், கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினர்.

இந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையை டோபாஜ்(Topaz) அணி வென்றது. நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி நிர்வாக முதல்வர் சத்தியகலா நன்றி கூறினார்.

# வாக்காளர் பட்டியல் விவரங்களை அறிய புதிய வசதி!

## தேர்தல் ஆணையம் தகவல்!!

**சென்னை, நவ.11**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்காக (எஸ்ஐஆர்) வாக்காளர்களுக்கு தேவைப்படும் 2002, 2005ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் விவரங்களை அறிய புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக தலைமைத் தோ்தல் அலுவலகம் சார்பில் எக்ஸ் தளத்தில் சனிக்கிழமை வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது:

தமிழகம் முழுவதும் வாக்காளர்பட்டியல்சிறப்பு தீவிர திருத்தப் பணிக்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கணக்கீட்டுப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு வசதிக்காக, முந்தைய சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியலில் வாக்காளர் விவரங்களை எளிதாக அறிந்துகொள்ள இணையதள தேடல் வசதி கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரியின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (https://www.elections.tn.gov.in/) இதைத் தெரிந்து கொள்ளலாம்.

முந்தைய தீவிர திருத்தம் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 2002, 2005 வாக்காளர் பட்டியல் விவரங்களை பொதுமக்கள் எளிதாக அணுகக்கூடிய வகையில் இந்த இணையதளத்தில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. தங்களது பெயர் அல்லது வாக்காளர் அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்தி விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

இந்த வசதி இப்போது நடைமுறையில் உள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு பொதுமக்கள் விவரம் அறிய உதவியாக இருக்கும்.இவ்வாறு அதில் பதிவிடப்பட்டுள்ளது.

## தமிழகத்தில்

# நவ.14-ம் தேதி வரை பரவலான மழைக்கு வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!!

**சென்னை, நவ.11**

தமிழகத்தில் இம்மாதம் 14–ம் தேதி வரை பரவலான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

மன்னார் வளைகுடா, அதை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும், தமிழக பகுதிகளின்மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுகின்றன. இதன் காரணமாக இன்று முதல் 14–ம் தேதி வரை தமிழகத்தில் பரவலாக இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இன்றுதிருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். 12–ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி,

தென்காசி மாவட்டங்களிலும், 13–ம் தேதி கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, திண்டுக்கல், தேனி, தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலைஆய்வுமையம் அறிவித்துள்ளது.



# கிணத்துக்கடவு பகுதியில் "நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்"ஈஸ்வரசாமி எம்.பி துவக்கி வைத்தார்!

**கிணத்துக்கடவு,நவ.11**

கிணத்துக்கடவு வட்டாரம் பகுதியில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமினை பொள்ளாச்சி எம்.பி ஈஸ்வரசாமி துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு மருந்து பெட்டகங்களை வழங்கினார். மேலும் அவர் பேசுகையில், தமிழக மக்கள் மீது அதீத நலம் கருத்தில் கொண்டு தமிழக முதலமைச்சர் துவக்கி வைத்த உன்னத திட்டமாகும். இந்த முகாமில் முழு உடல் பரிசோதனை திட்டம் என்கிற வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பொது மருத்துவம்,பொது அறுவை சிகிச்சை, எழும்பியல் மருத்துவம், மகப்பேறியியல்,மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம்,இருதயவியல், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம்,கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம்,என அனைத்தும் முகாமில் இடம் பெற்றுள்ளது. மேலும் புற்றுநோய் பாதிப்புகளை ஆண், பெண் என்று இருபாலருக்கும் கண்டறியும் பரிசோதனைகள், ரத்த பரிசோதனை, இருதய பரிசோதனை என பல்வேறு டெஸ்டுகளும் எடுக்கப்படுகிறது. இதுவரை 13 மருத்துவ முகாம்கள் நடைபெற்று உள்ளது. அனைத்து முகாம்களையும் சேர்த்து மொத்தம் 27 ஆயிரத்து 795 மருத்துவ பயனாளிகள் பயனடைந்துள்ளனர் என்றார்.

உடன் மாவட்ட சுகாதார அலுவலர் பாலுசாமி, பேரூராட்சி தலைவர் ஆர். கதிர்வேல், வட்டார சுகாதார அலுவலர் விக்னேஷ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ராஜன், பேரூராட்சி வார்டு துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள் உட்பட கலந்து கொண்டனர்.




கோவை பத்திரிக்கையாளர் சங்கத்தில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பின்போது தேசிய பார்வையற்றோர் இணையத்தின் பார்வை மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் தடைபடாமல் இருக்க உதவுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். மேலும் அரசாணை எண் 151னின் படி வேலைவாய்ப்பு பெற்ற அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளதாகவும், இலவச பஸ் பயண அட்டை வழங்குவதிலும்,புதுப்பித்தலிலும்சிரமத்துக்குஉள்ளாவதாகவும்மற்றும்பல்வேறுகோரிக்கைகளையும் அரசுக்கு வலியுறுத்தி உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் லயன் பா. மனோகரன் மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் லயன் டி. சதாசிவம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நெல்லை, தூத்துக்குடியில் கனமழை;

# திருச்செந்தூர் கோவிலுக்குள் தண்ணீர் புகுந்தது!

**நெல்லை, நவ.11**

நெல்லை, தூத்துக்குடி, தென்காசியில் பரவலாக கனமழை பெய்தது. திருச்செந்தூர் சிவன் கோவிலுக்குள் தண்ணீர் புகுந்தது.

தூத்துக்குடி, நெல்லை மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து இருந்தது.அதன்படி,தூத்துக்குடி மாவட்டத்தில் இரவில் பல்வேறு இடங்களில் பரவலாக கனமழை பெய்தது. திருச்செந்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான காயல்பட்டினம், ஆலந்தலை, பரமன்குறிச்சி, தளவாய்புரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இடியுடன் கூடிய பலத்த மழை பரவலாக பெய்தது. இதனால் திருச்செந்தூர் பிரதான சாலைகளான டி.பி.ரோடு, காமராஜர் சாலை, சபாபதிபுரம் தெரு உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் தேங்கியது. மேலும், திருச்செந்தூர் சிவன் கோவிலுக்குள் மழைநீர் புகுந்தது. அங்கு மின் மோட்டார் மூலம் மழைநீர் அப்புறப்படுத்தப்பட்டது. நேற்று பகலில் மழை இல்லை. மேக மூட்டமாக காட்சி அளித்தது. இதேபோல் மெஞ்ஞானபுரம் சுற்று வட்டாரங்களான நங்கைமொழி, வள்ளியம்மாள்புரம், மானாடு, குருநாதபுரம், பரமன்குறிச்சி, நாலுமூலைக்கிணறு ஆகிய பகுதிகளில் நேற்று மதியம் 2 மணியளவில் பலத்த மழை பெய்தது. சுமார் அரை மணி நேரம் பெய்த இந்த மழையால் சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அதில்வாகனங்கள்ஊர்ந்து சென்றன. இதேபோல் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காலையில் வெயில் அடித்தது. மதியம் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. குளிர்ந்த காற்றும் வீசியது. தொடர்ந்து நெல்லை டவுன், பேட்டை, கோடீஸ்வரன் நகர், பழையபேட்டை, அபிஷேகப்பட்டி, கல்லூர், சுத்தமல்லி ஆகிய பகுதிகளிலும் பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் சாலையில் மழைநீர் குளம் போல் தேங்கி காணப்பட்டது. தென்காசி மாவட்டத்தில் பாவூர்சத்திரம், ஆவுடையானூர், திப்பணம்பட்டி, திரவியநகர், ஆலங்குளம், கடையம், சாலைப்புதூர், வள்ளியம்மாள்புரம், பாப்பான்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 1 மணி நேரமாக மிதமான மழை பெய்தது.



ஞாயிறு விடுமுறை யொட்டி ஊட்டியில் குவிந்த சுற்றுலா பயணிகள் அங்குள்ள பைக்காரா படகு இல்லத்தில் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்.

## சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள

# த.வெ.க.வில் 80 பேர் குழு அமைப்பு!

## நடிகர் விஜய் கண்காணிப்பில் இயங்கும்!!

**சென்னை, நவ.11**

சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள தவெகவில் 80 பேர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதுநடிகர் விஜய் கண்காணிப்பில் இயங்கும் என தகவல் வெளியாகியுள்ளது. தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற தேர்தல் பணிகள் தொடங்கின. இந்த நிலையில் கரூர் வேலுசாமிபுரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 42 பேர் இறந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 2026 சட்டசபைத் தேர்தலைஇலக்காககொண்டு தமிழக வெற்றிக் கழகம் செயல்பட்டு வருகிறது. கரூர் சம்பவத்திற்கு பின் சுமார் ஒரு மாதமாக அமைதி காத்த தவெக, தற்போது மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. கரூரில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் அழைத்து விஜய் அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இதையடுத்து நீண்ட இடைவேளைக்குப் பிறகு சமீபத்தில் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் விஜய் தலைமையில் சென்னை அருகே மாமல்லபுரத்தில் கூடியது. இதில், 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில்தமிழகத்தில்புதிய மற்றும் நேர்மையான அரசியல்அதிகாரமாற்றத்தை ஏற்படுத்தும் உன்னத லட்சிய நோக்கத்தின் செயல்வடிவத்தின் முதல்படியாக நம் தலைவர் விஜய், மக்கள் சந்திப்புப் பயணத்தை தொடங்கினார்.திருச்சி,அரியலூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய ஊர்களில் நம் தலைவரின் அனல் பறக்கும் பேச்சும் ஆளும் தரப்பை நோக்கிய கேள்விகளும் தமிழக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தின. ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழக அரசியல் வரலாறு இதுவரை காணாத இந்திய அரசியல் அரங்கத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் அளவுக்கு மக்கள் அளித்த வரவேற்பு இருந்தது.

இது ஆள்வோருக்கும் அதிகார வெறி கொண்டோருக்கும் எரிச்சலூட்டியது. 2025 , செப். 27ம் தேதியன்று 3வது கட்டமாக நாமக்கல் மக்கள் சந்திப்பை முடித்து கரூரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் திட்டமிட்டு கற்பனைக்கும் எட்டாத வகையில் பாதுகாப்பு குறைபாடு மற்றும் இன்னபிற செயற்கையான குளறுபடிகள் ஏற்படுத்தப்பட்டனவோ என்று எண்ணத்தக்க வகையில் அசம்பாவிதம் நிகழ்ந்தது.

அதில் 41 பேர் பலியாகினர். தமிழகத்தில் அரசியல் மாற்றத்தை விரும்பும் மக்கள் அரசியலை மையமாகக் கொண்ட நம் லட்சிய பயணத்தில் பங்கெடுத்துக்கொள்ள வந்து உயிர் நீத்த நம் சொந்தங்களான அந்த தியாகிகளுக்கு ஆழ்ந்த இரங்கலை இந்த பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது.



இரண்டாவது தீர்மானத்தை திருப்பூர் மாநகர மாவட்ட பொதுக் குழு உறுப்பினர் மகாலட்சுமி பாலமுருகன் வாசித்தார்.

"அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நேர்ந்த கொடுமையே நம் நெஞ்சைவிட்டுஅகலவில்லை. அதற்குள் கோவையில் கல்லூரி மாணவி ஒருவர் கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளார் என்ற செய்தி தமிழகத்தையே பதற வைத்துள்ளது.

இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசு சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தி சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனையைப் பெற்றுத் தர வேண்டும். தொடர்ந்து இதுபோன்ற கொடுமைகள் நடந்த வண்ணம் இருப்பதால், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எங்கே, பெண்களுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு எங்கே என்ற கேள்விகளும் எழுந்த வண்ணம் உள்ளன. தொடர்ந்து துன்பம் நேருகிறதே. காவல்துறையை கையில் வைத்திருக்கும் தமிழக முதல்வர் தூக்கம் களைந்து எப்போது எழுவார் என்றும் தெரியவில்லை. இந்த வெற்று விளம்பர திமுக ஆட்சியில் தமிழ்நாடே தலைகுனிந்து நிற்கிறது என்பதைக் கூறுவதோடு சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யாத திமுக அரசுக்கு வன்மையான கண்டனங்களை இந்த சிறப்பு பொதுக்குழு பதிவு செய்கிறது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதை தொடர்ந்து தற்போது அடுத்த கட்டப் பணிகளில் விஜய் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில் கட்சியில் பல அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, 80 பேர் கொண்ட வார் ரூம் அமைக்கப்பட்டுள்ளது . அதை விஜய் நேரடியாக கண்காணிப்பார் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த குழு சட்டப்பேரவைத் தேர்தல் பணிகளை மேற்கொள்ளும் என அறிவிக்கப்ட்டுள்ளது. குறிப்பாக விஜய் மீண்டும் மக்கள் சந்திப்பு பயணங்களையும் மேற்கொள்ள உள்ளார். இருந்தாலும் கட்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய மாவட்டச் செயலாளர்களை கண்காணிக்க விஜய் புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்.

ஏற்கனவே மாவட்டச் செயலாளர்களின் செயல்பாடுகள்குறித்துஅறிக்கை கொடுக்க தனியார் நிறுவனம் ஒன்றுடன் தவெக ஒப்பந்தம் செய்திருக்கிறது. தற்போது விஜய்க்காக பிரத்யேக வார் ரூம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வார் ரூம் மூலமாக மாவட்ட நிர்வாகிகளை விஜய் நேரடியாக கண்காணிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் சோசியல் மீடியாவில் திமுகவுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுக்க தவெக ஆயத்தமாகி இருக்கிறது எனற புதிய தகவல் வெளியாகி உள்ளது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



மேட்டுப்பாளையம் பேருந்து நிலையம் அருகே குடும்பப் பிரச்சினை காரணமாக பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயன்றவரை போலீசார் தடுத்து மீட்டனர்.

# மேட்டுப்பாளையத்தில் விவசாயி தீக்குளிக்க முயற்சி!

**மேட்டுப்பாளையம்,நவ.11–**

மேட்டுப்பாளையம் பேருந்துநிலையம்அருகே குடும்பப் பிரச்சினை காரணமாக பெட்ரோல் ஊற்றி தீ குளிக்க முயன்றவரை போலீசார் தடுத்து மீட்டனர்.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அடுத்துள்ள சிறுமுகை சம்பரவள்ளி பகுதியை சேர்ந்தவர் கார்த்திக்..இவருக்கு சொந்தமாக அந்த பகுதியில் விவசாய நிலம் உள்ளது. கார்த்திக்கும் அவரது உடன் பிறந்த சகோதரிக்கும் சொத்து சம்பந்தமாக அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வந்துள்ளது. இதனால் மனமுடைந்த கார்த்திக் இன்று காலை மேட்டுப்பாளையம் பேருந்து நிலையம் எதிரே போக்குவரத்து மிகுந்த 6 கார்னர் சாலை சந்திப்பு பகுதியில் தனது மீது பெட்ரோலை ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.திடீரென்றுதீக்குளிக்கமுயன்ற கார்த்திக்கை அங்கு போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் தடுத்து நிறுத்தி அவர் மீது தண்ணீரை ஊற்றி காப்பாற்றினர். இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் மேட்டுப்பாளையம் நீலகிரி சாலை சந்திப்பில் போக்குவரத்து அதிக அளவில் இருந்த நிலையில் அப்பகுதியில் ஒருவர் தீக்குளிக்க முயன்றது பரபரப்பை ஏற்படுத்தியது.

## நடிகர் விஜய் நடித்து வரவிருக்கும்

# ஜனநாயகன் படத்தில் அனல் பறக்கும் அரசியல் வசனம் பேசும் காட்சிகள்!

**சென்னை, நவ.11**

நடிகர் விஜய் நடித்து வரவிருக்கும் ஜனநாயகன் படத்தில் அனல் பறக்கும் அரசியல் வசனம் பேசும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

திரைக்கதையை தாண்டி பாடல் வரிகளிலும் அரசியல் பேசி வந்த விஜயின் பாடல் வரிசையில் புதிதாக ஜனநாயகன் படத்தின் கச்சேரி பாடல் இணைந்துள்ளது. 2002ல் வெளியான தமிழன் படத்தில் மாஞ்சோலைதேயிலைதோட்ட விவகாரம் உள்பட விஜயின் அரசியல் வசனங்கள் அப்போது கவனம் பெற்றன. தனது அடுத்தடுத்த படங்களில் வசனங்கள் வாயிலாக அரசியல் பேசி வந்த விஜய், கத்தி படத்தில் வெளிப்படையாக அரசியல் பேசி கவனம் ஈர்த்தார். அதன்பின் வெளியான மெர்சல் படம் ஜிஎஸ்டி குறித்து விஜய் பேசியது அப்போதைய அரசியல் களத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

தொடர்ந்து வெளியான சர்கார் படத்தில் கள்ள ஓட்டுக்கு எதிராக மட்டுமின்றி மீனவர் பிரச்சினை, ஹைட்ரோகார்பன், மீத்தேன் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேசி தனது அரசியல் பயணத்திற்கு அச்சாரம் கொடுத்தார். அதன்பின் வெளியான மெர்சல் படம் ஜிஎஸ்டி குறித்து விஜய் பேசியது அப்போதைய

அரசியல் களத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.தொடர்ந்து வெளியான சர்கார் படத்தில் கள்ள ஓட்டுக்கு எதிராக மட்டுமின்றி மீனவர் பிரச்சினை, ஹைட்ரோகார்பன், மீத்தேன் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பேசினார் .

இந்நிலையில், விஜயின் கடைசிப் படம் எனக் கூறப்படும் ஜனநாயகன் படத்தின் கச்சேரி பாடல் வெளியாகி மேலும் அரசியல் வசனங்களை பேசியுள்ளது.

கரூர் சம்பவத்திற்கு பின் வெளியான கச்சேரி பாடலில், விஜய் பாடும் வரிகள் தொண்டர்களை ஒன்றிணைப்பது போல் உள்ளது . தனக்கென வாழாதே, பறக்கட்டும் நம்ம கொடி, காலம் பொறக்குது உள்ளிட்ட வசனங்களுடன் தமிழுடன் சேர்ந்து இந்தி, மலையாளம் உள்ளிட்ட மொழிகளிலும் விஜய் பாடி உள்ளார். கச்சேரி பாடல் விஜயின் அரசியல் பயணத்திற்கு கைகொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.



நாகர்கோவிலில் சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த நாளை முன்னிட்டு பா.ஜ.க. இளைஞரணி சார்பில் பாதயாத்திரை துவங்கும் முன் மாவட்ட தலைவர் கோபகுமார் தலைமையில் பெருந்தலைவர் காமராஜர் முழு திருவுருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## தமிழக கல்லூரிகளில்

# மாணவர் பேரவை தேர்தலை நடத்த முன்வர வேண்டும்!

## மார்க்சிஸ்ட் கம்யூ. வலியுறுத்தல்!!

**சென்னை,நவ.11–**

கல்லூரிகளில் மாணவர் பேரவை தேர்தலை நடத்த தமிழக அரசு முன்வர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில் மாணவர்களின் போராட்டங்களால் தான் திராவிட இயக்கங்கள் வளர்ச்சி பெற்று, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின. இதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால், தமிழகத்தில் தற்போது மாணவர் பேரவை தேர்தல் என்பதே நடத்தப்படுவது இல்லை. மாணவர் இயக்கம் மூலம் வலுப்பெற்ற திராவிட இயக்கங்கள், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு மாணவர் பேரவை தேர்தல் நடத்துவது என்பது அரிதாகி விட்டது.

'இந்த தேர்தலை நடத்துவதால் மாணவர்களின் படிப்பு கெட்டு விடும், மாணவர்களுக்குள் மோதல் போக்கு வந்துவிடும், மாணவர்களின் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்படும்' என்கிற சொத்தைக் காரணங்களை சொல்லி தமிழகத்தில் மாணவர் பேரவை தேர்தல் நடத்தாமல் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

அதேநேரம், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மாணவர் பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் தற்போது நடந்து வருகிறது.

அங்கு ஆண்டுதோறும் தவறாமல் மாணவர் பேரவை தேர்தல் நடத்தப்படுகிறது. அங்கிருந்துதான் மிகச்சிறந்த பொருளாதார நிபுணர்கள், சிறந்த அரசியல் அறிஞர்கள், வல்லுநர்கள் வெளிவருகிறார்கள்.

எனவே, தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் மாணவர் பேரவை தேர்தலை நடத்த திமுக அரசு முன்வரவேண்டும். இவ்வாறு ஜனநாயகச் சூழலை கல்வி வளாகங்களில் ஏற்படுத்துவது, இந்திய அரசியலில் தமிழக மாணவர்கள் ஈடுபடுவதற்கும், விவாதிப்பதற்கும் பயன்படும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பொது இடத்தில் சிறுநீர் கழித்த விவகாரம்:

# அவமானத்தில் தற்கொலை செய்த இளைஞர்!

**புனே, நவ.11**

மகாராஷ்டிராவின் சத்ரபதி சம்பாஜிநகரில், பொது இடத்தில் சிறுநீர் கழித்த வீடியோ சமூக ஊடகங்களில் வைரலானதால், தொடர்ச்சியான மிரட்டல்கள் மற்றும் துன்புறுத்தல் காரணமாக 28 வயது இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

ஜால்னாவில் உள்ள ரயில் நிலையத்தின் "சத்ரபதி சம்பாஜிநகர்" பெயர்ப்பலகை அருகே அந்த இளைஞரும் அவரது நண்பரும் சிறுநீர் கழித்த வீடியோ எடுக்கப்பட்டு, உள்ளூர் சிவசேனா மாவட்ட தலைவர் உட்பட பலரால் இன்ஸ்டாகிராமில் பரப்பப்பட்டது.

இந்த செயலுக்காக இருவரும் பொது மன்னிப்பு கோரிய பின்னரும்,

இறந்த இளைஞருக்கு மட்டும் தொடர்ந்து தொலைபேசி மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் மிரட்டல்கள் வந்ததாகவும்,

இதனால் அவர் அவமானம் அடைந்ததாகவும் போலீஸார் தெரிவித்தனர். தொடர் துன்புறுத்தலால் விரக்தியடைந்த அவர், கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

# சமூகநீதி இயக்கத்தின் உந்துசக்தி தேஜஸ்வி யாதவ்!

## முதலமைச்சர் வாழ்த்து!!

**சென்னை, நவ.11**

சமூகநீதி இயக்கத்தின் உந்துசக்தி பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் எனதமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளதாவது:

தம்பி தேஜஸ்வி யாதவுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். பீகாரில் புத்துணர்வு பெற்றுள்ள சமூக நீதி இயக்கத்தின் உந்துசக்தியாக எழுந்து, கோடிக்கணக்கானோருக்கு நம்பிக்கை அளிப்பவராகத் தாங்கள் இருக்கிறீர்கள்.

பீகாரில் சமத்துவம், தரமானகல்வி, வேலை வாய்ப்புகள், மாண்பு என அவர்களது எதிர்பார்ப்புகளைத் தாங்கள் நிறைவு செய்வீர்கள் என நம்புகிறோம். இந்த வரலாற்றுப் பாதையில் தொடர்ந்து வலிமையோடும், நல்ல உடல் நலத்தோடும், துணிச்சலோடும் தாங்கள் தொடர விழைகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. ஆட்சியில்

# அம்மா உணவகம் பொலிவிழந்து பராமரிப்பின்றி காணப்படுகிறது!

## அ.தி.மு.க. ஐ.டி. விங் குற்றச்சாட்டு!!

**சென்னை, நவ.11**

தி.மு.க ஆட்சியில் அம்மா உணவகம் பொலிவிழந்து பராமரிப்பின்றி காணப்படுகிறது என்று அ.தி.மு.க தகவல் தொழில்நுட்பப் பிரிவு குற்றம்சாட்டி உள்ளது. இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் கூறியதாவது :

ஏழையின் பசி போக்கும் அமுதம்.. உழைக்கும் மக்களின்பசிப்பிணிநீக்கி, அவர்களின் முகங்களில் புன்னகை பூக்க வைக்க, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவால் கொண்டுவரப்பட்ட அற்புத திட்டம் இந்த "அம்மா உணவகம்". உணவுக்காக கையேந்தி நின்ற கைகளை,குறைந்த விலையில் உணவளித்து அவர்களின் வாழ்வை கண்ணியமாக்கியது அம்மா உணவகம் என்ற "அட்சயப் பாத்திரம்". இது வெறும் உணவு கூடம் அல்ல, சமூக மாற்றத்திற்கான கருணை முகம். விடியா ஆட்சியில் பொலிவிழந்து, சரிவர பராமரிப்பின்றி காணப்படும் அம்மா உணவகங்கள் 2026–ல் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அதிமுக ஆட்சி அமைந்தவுடன் மீண்டும் புத்துயிர் பெறும்,

சிறப்பாக செயல்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருப்பதியில்

# டிசம்பர் 30– ஆம் தேதி வைகுண்ட ஏகாதசி!

## தேவஸ்தானம் தகவல்!!

**திருமலை,நவ. 11**

திருப்பதியில் வைகுண்ட ஏகாதசி டிசம்பர் 30–ஆம் தேதி கொண்டாடப்பட இருக்கிறது. ஏகாதசிக்கு சொர்க்கவாசல்எத்தனை நாட்கள் திறந்திருக்கும் என்பது குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளது . இதன்படி வருகின்ற டிசம்பர் 30 ஆம் தேதி முதல் ஜனவரி 8 ஆம் தேதி வரையிலான 10 நாட்களுக்கு திருப்பதியில் சொர்க்க வாசல் திறந்திருக்கும் என திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஆண்டுதோறும் திருப்பதியில் வைகுண்ட ஏகாதசி மிகவும் விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். இந்நிலையில் நடப்பாண்டு வைகுண்ட ஏகாதசி டிசம்பர் 30ஆம் தேதி கொண்டாடப்பட இருக்கிறது.

இதற்கான சிறப்பு ஏற்பாடுகள் முன்கூட்டியே தொடங்கப்படும். மேலும் பக்தர்களின் எண்ணிக்கை வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்பதால், பாதுகாப்பு நடவடிக்கைகள்பலப்படுத்தப்படும்.

வருகின்ற டிசம்பர் 30ஆம் தேதி முதல் ஜனவரி 8ஆம் தேதி வரை திருப்பதியில் சொர்க்க வாசல் திறந்திருக்கும்.

சொர்க்கவாசல் தரிசனத்திற்கான ஆன்லைன் மற்றும் நேரடி டிக்கெட் விநியோகம் குறித்த தகவல்கள் விரைவில் வெளியிடப்படும். மேலும் தரிசன டிக்கெட் வாங்கிதருவதாகபுரோக்கர்கள் மோசடி வேலைகளில் ஈடுபட்டு வருவதால், பக்தர்கள் யாரையும் நம்ப வேண்டாம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி, பவானி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025–ஐ முன்னிட்டு பனைவிதை நடும் பணியை தொடங்கி வைத்தார்.

## சென்னையில் பரபரப்பு:

# செல்போனில் ரீல்ஸ் பார்த்துக் கொண்டே ஆட்டோ, கார் ஓட்டும் ஓட்டுநர்கள்!

## போக்குவரத்து போலீசார் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்!!

**சென்னை, நவ. 11**

சென்னையில் செல்போனில் ரீல்ஸ் பார்த்துக் கொண்டே ஆட்டோ, கார் ஓட்டும் ஓட்டுநர்களால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. ஆகவே, இது போன்று விதியை மீறி வாகனம் ஓட்டுபவர்கள் மீது போக்குவரத்து போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையில் ஆட்டோ, கார் உள்ளிட்ட வாகனங்களில் ஓட்டுநர்கள் தங்கள் வாகனங்களில் செல்போனை பொருத்திக் கொண்டு "மேப்" பார்த்துக்கொண்டு வண்டியை ஓட்டுவது வழக்கம்.

ஒருசில ஆட்டோ, கார் ஓட்டுநர்கள் வண்டியில் செல்போனை பொருத்திக் கொண்டு சமூக வலைதளத்தில் ரீல்ஸ் பார்த்துக் கொண்டே ஓட்டுகிறார்கள்.

இதற்கிடையில், சென்னைஅண்ணாசாலை ஜெமினி மேம்பாலம் அருகே 8589 என்ற எண் கொண்ட ஆட்டோவில் ஓட்டுனர்ஒருவர், இரண்டு செல்போனை ஆட்டோவில் பொருத்தி விளையாட்டு, ஒரு செல்போனில் "மேப்" மற்றும் மற்றொரு செல்போனில் ரீல்ஸ்பார்த்துக்கொண்டே ஓட்டோவை ஓட்டியுள்ளார். இதுதொடர்பாக படத்தை சமூக ஆர்வலர் ஒருவர் முகநூல் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், "ஆட்டோ ஓட்டுநர்கள் மட்டுமல்லாமல், கார் ஓட்டுநர்களும் செல்போனில் ரீல்ஸ்பார்த்துக்கொண்டே வாகனம் ஓட்டுவது வழக்கமாகிவிட்டது. இது மிகவும் ஆபத்தானது. சாலையில்செல்லும்போது ரீல்ஸ் பார்த்துக் கொண்டே வாகனம் ஓட்டுவதால், ஓட்டுநர்களின் கவனம் சிதறி, சாலை விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் அப்பாவி பொது மக்கள் விபத்தில் சிக்கும் சூழ்நிலை உருவாகிறது. எனவே, போக்குவரத்து காவல்துறை இந்த விதியை மீறி ரீல்ஸ் பார்த்துக் கொண்டே வாகனம் ஓட்டும் ஓட்டுநர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாகனம் ஓட்டும்போது செல்போனைப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றம் என்பதோடு, பிறரின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் செயலாகும். போக்குவரத்து காவல்துறை இந்த விவகாரத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தி, விதிமீறும் ஓட்டுநர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.



விஜய் மக்கள் இயக்க முன்னாள் தென்காசி நகர செயலாளர் மணிகண்டன் பா.ஜ.க. விளையாட்டு பிரிவு மாவட்ட தலைவர் முரளிதரன் முன்னிலையில் பா.ஜ.க.வில் இணைந்தார். மாவட்ட செயலாளர் இசக்கிமுத்து, சுடலைக்கனி மற்றும் சிவா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## கொடைரோடு அருகே

# காற்றாலை இறக்கை ஏற்றி சென்ற லாரி கவிழ்ந்தது!

## பல மணி நேரமாக மீட்பு பணி தீவிரம்!!

**நிலக்கோட்டை, நவ.11**

திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகேமதுரைதிண்டுக்கல்தேசிய நான்கு வழிச்சாலையில் தூத்துக்குடியில் இருந்து மகாராஷ்டிராவை நோக்கி ராட்சச காற்றாலை ரெக்கை ஏற்றி வந்த லாரி அம்மையநாயக்கனூர் அருகே வந்தபோது ஓட்டுநரின்கட்டுப்பாட்டைஇழந்துதாறுமாறாக ஓடி சாலையின் நடுவே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது,இந்த விபத்தில் ஓட்டுநர் மற்றும் பணியாளர்கள் சிறிய காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயர்த்த பின்னர்,மேலும்இராட்சசகாற்றாலைரெக்கை எதிர்திசை சாலைவரை கவிழ்ந்தபோதும் வாகனங்களில்எதுவும்வராததால்பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.


இந்த விபத்தால் திண்டுக்கல்மதுரை மார்க்கமாக செல்லும் வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்று கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது,தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த அம்மையநாயக்கனூர் காவல்துறையினர் போக்குவரத்தை சரி செய்து விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்,

மேலும் இருவழிச்சாலையில் சென்ற வாகனங்கள் ஒரே வழிய வழியாக இயக்கப்பட்டது,

இதனையடுத்து ஐந்திற்கும் மேற்பட்ட இராட்சச கிரேன்கள் மூலம் காற்றாலை ரெக்கையையும் லாரியையும் தனித்தனியாக பிரித்து நிமிர்த்தும் பணிகள் காலை ஏழு மணி முதல் மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது,



திண்டுக்கல் மாவட்டம் மதுரைதிண்டுக்கல் நான்கு வழிச் சாலை அம்மையநாயக்கனூர் அருகே காற்றாலை இறக்கை ஏற்றி சென்ற லாரி சாலையில் நடுவே கவிழ்ந்து கிடப்பதையும், போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு வாகனங்கள் அணிவகுத்து நிற்பதையும்,மீட்பு பணிகள் நடைபெற்று வருதையும் படத்தில் காணலாம்.



## சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (S.I.R) எதிர்கொள்வது குறித்து
# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் காணொலி மூலம் நடந்த மாவட்டச்செயலாளர்கள் கூட்டம்!

திருப்பத்தூர் நவ.11

திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்துகொண்டார்.

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கட்சியினர் மிகுந்த விழிப்புணர்வுடன் பணியாற்றிடவும்,

SIRக்கு எதிராக அனைத்து மாவட்டங்களிலும் வரும் 11ஆம் தேதி நடைபெறவுள்ளகண்டனஆர்ப்பாட்டத்தைவெற்றிபெறச் செய்யவும் பல்வேறு ஆலோசனைகளை தமிழ்நாடு முதல்வர் வழங்கினார். சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் எனும் சதி வலையில் சிக்காமல் நம்மக்களைக்காக்கவேண்டியபொறுப்பு கழக நிர்வாகிகள் ஒவ்வொருவருக்கும் உள்ளது. மக்களைச் சந்தித்து நம்மை வெல்ல முடியாதவர்கள், S.I.R அநீதியை கையில் எடுத்திருப்பதை, மக்கள் மன்றத்திலே அம்பலப்படுத்துவோம்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பை பலப்படுத்து வோம் என பேசினார்.



கோயம்புத்தூர் மாவட்டம், தாமஸ் பார்க் ரவுண்டானா பகுதியில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 (SPECIAL INTENSIVE REVISION 2026) தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் பவன்குமார் க.கிரியப்பனவர் அரசு கலைக்கல்லூரி மாணவ, மாணவியர்களின் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை கொடி அசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் பயிற்சி (ஆட்சியர்) மரு.பிரசாத் மகளிர் திட்ட இயக்குனர் மதுரா, வருவாய் கோட்டாட்சியர் (தெற்கு) மாருதிபிரியா, தேர்தல் வட்டாட்சியர் தணிகைவேல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்} மகேஸ்வரி, கல்லூரி மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்டத்தை சேர்ந்தவரிடம்
# ரிசர்வ் வங்கியில் பணம் பெற்று தருவதாக கூறி மோசடி!
## தந்தை, மகன் உள்பட 3 பேர் கைது!

கிருஷ்ணகிரி, நவ.11

ரிசர்வ் வங்கியில் பணம் பெற்று தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட தந்தை, மகன் உள்பட 3 பேரை கைது செய்து சிபிசிஐடி போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்திய ரிசர்வ் வங்கியில் இருந்து பணம் பெற்று தருவதாக பொய்யாக ஆசை வார்த்தை கூறி பொதுமக்களிடம் பணம் பெற்று மோசடி செய்யும் கும்பல் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் சேலம் மாவட்டம் திருமலைகிரி அருகே உள்ள பாறைவட்டம் வேடுகாத்தான்பட்டியை சேர்ந்த அய்யனார் என்பவர் கிருஷ்ணகிரி சி.பி.சி.ஐ.டி. போலீசில் புகார் கொடுத்தார்.

அதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த பாலாஜி உள்ளிட்ட சிலர் தன்னிடம், ரிசர்வ் வங்கியில் அதிக பணம் பெற்று தருவதாக கூறி பணம் வாங்கி மோசடி செய்து விட்டதாக கூறியிருந்தார். அதன் பேரில் போலீசார் மோசடி உள்பட பல்வேறு பிரிவுகளின் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த வழக்கில் போலீசாரால் தேடப்பட்ட வந்த கிருஷ்ணகிரி மாவட்டம் ஜெகதேவி அடுத்த ஒண்டியூரை சேர்ந்த பாலாஜி (35), அவரது தந்தை ராஜாமணி, பாலகிருஷ்ணன் ஆகிய 3 பேரை கிருஷ்ணகிரி சி.பி.சி.ஐ.டி. போலீஸ் இன்ஸ்பெக்டர் கோமதி தலைமையிலான போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இது குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் கூறியதாவது: ரிசர்வ் வங்கியில் இருந்து பணம் பெற்று தருவதாக கூறி பொதுமக்களை நம்ப வைத்து ஏமாற்றி வரும் போலியான புரோக்கர்கள் மீது தமிழகம் முழுவதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் இதுவரை 45க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 100க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதை போல யாராவது போலி புரோக்கர்களை நம்பி பணம் கொடுத்து ஏமாந்து இருந்தால் சேலம் சி.பி.சி.ஐ.டி. டிஎஸ்பி–யை நேரில் அணுகி புகார் தெரிவிக்கலாம் என்றனர்.



மத்தூர் அருகே சமுதாய கூடம்பல்நோக்கு கட்டிடம் கட்ட பூமி பூஜை நடைபெற்றது. அதேபோல் குட்டூர் ஊராட்சியில் ராஜ்யசபா உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில், முருகன் கோவில் அருகில் 15 லட்சம் மதிப்பீட்டில் சமூதய கூடம் மற்றும் ஜீஞ்சம்பட்டி பலராம் வட்டத்தில் 9 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம் கட்ட பூமி பூஜை நடைபெற்றது. இதில் ராஜ்யசபா உறுப்பினர் மு. தம்பிதுரை கலந்துகொண்டு பணிகளை துவக்கி வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் முன்னாள் பர்கூர் எம்எல்ஏ சி.வி.ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் ஜெயபால், பண்டசீமனூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், சந்தூர் வெள்ளையன், ஒப்பந்ததாரர் கார்த்திக் மற்றும் அதிமுக கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கோபி அருகே
# காரில் கடத்தி வந்த அஙஅ மதுபாட்டில்கள்!
## ஒருவர் கைது; இருவர் தப்பியோட்டம்!!



கோபி, நவ.11

கோபி மதுவிலக்கு போலீசாருக்கு அத்தாணி அருகே காரில் மதுபானம் கடத்தப்படுவதாக தகவல் கிடைத்தது. அதன்பேரில், கோபி மதுவிலக்கு எஸ்.எஸ்.ஐ. சரவணன் தலைமையிலான குழுவினர் அத்தாணி கைகாட்டி பிரிவு டாஸ்மாக் பார் பின்புறம் சென்று சோதனை செய்த னர். அப்போது அங்கு ஒரு காரில் 838 அரசு மதுபான பாட்டில்கள் கடத்தி வரப்பட்டு கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய, டாஸ்மாக் பாரில் வேலை செய்து வந்தசிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சிவக்குமார்(45), சிலம்பரசன்(37) மற்றும் மதுரையைச் சேர்ந்த மோசஸ் என்கிற மோகன் ஆகியோர் கொண்டு வந்துள்ளனர். போலீ சார் கண்டதும், போலீசாரைக் சிலம்பரசன் மற்றும் மோசஸ் ஆகியோர் தப்பியோடி விட்டனர். சிவக்குமார் மட்டும் சிக்கினார். அவரை போலீசார் கைது செய்தனர். அவரிடமிருந்து 838 மதுபாட்டில்களையும், அவற்றை கடத்த பயன்படுத்திய கார், டூவீலர் மற்றும் ரொக்கம் ரூ.95 ஆயிரம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

## குமாரபாளையம்
# பெருமாள் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள்!

குமாரபாளையம், நவ, 11

குமாரபாளையத்தில் உள்ள பெருமாள் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடந்தது.

சனிக்கிழமை நாளையொட்டி குமாரபாளையம் விட்டலபுரி, பாண்டுரங்கர் கோயிலில் சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனைகள் நடந்தன. பக்தி பாடல்கள் நிகழ்ச்சி நடந்தது. இதே போல் ராமர் கோயில், அக்ரஹாரம் லட்சுமி நாராயண சுவாமி கோயில், திருவள்ளுவர் நகர் சவுந்திரராஜ பெருமாள் கோயில், விட்டலபுரி ராமர் கோயில், கோட்டைமேடு தாமோதர பெருமாள் கோயில், கள்ளிப்பாளையம் பெருமாள் கோயில், தட்டான் குட்டை ஜெய்ஹிந்த் நகர் புருஷோத்தம பெருமாள் கோயில் உள்ளிட்ட பல பெருமாள் கோயில்களில்



சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேக, அலங்கார, ஆராதனைகள் நடத்தப்பட்டன. பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டன.

# ஆடு, கோழிகளை கடித்து குதறும் தெரு நாய்கள்!
## கால்நடை வளர்ப்போர் வேதனை!!

குமாரபாளையம்,நவ.11

குமாரபாளையம் அருகே தெரு நாய்களால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கிராமத்தில் ஆடு மேய்க்கும் கூலி தொழிலாளர்கள் வேதனை.தெரிவித்தனர்.

குமாரபாளையம் அருகே உள்ள குள்ளநாய்க்கன்பாளையத்தில் பெரும்பாலோர் கால்நடை வளர்ப்பு தொழில் செய்து வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிகளில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் ஆடுகளை மேய்க்கும் கூலி தொழிலாளர்கள், ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது, அங்கு சுற்றி திரியும் நாய்கள் தங்கள் ஆடுகளையும் கோழிகளையும் பிடித்து கொன்று விடுவதால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்தனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பத்துக்கும் மேற்பட்ட ஆடுகளையும் 50க்கும் மேற்பட்ட கோழிகளையும் தெரு நாய்கள் கடித்துக் குதறியுள்ளன. நேற்று காலை வழக்கம் போல் தொழிலாளர்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது கூட்டமாக வந்து தெரு நாய்கள் இரண்டு ஆடுகளையும், இரண்டு கோழிகளையும் கடித்து குதறிவிட்டு சென்றன. அதனை தடுக்கச் சென்ற தொழிலாளர்களையும் நாய்கள் தாக்க முற்படுவதால் அவர்கள் அச்சத்துடன் உள்ளனர். எனவே கிராமப் பகுதியில் உள்ள தெரு நாய்களை உடனடியாக அகற்ற வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.



# ஹான்ஸ் விற்பனைக்காக எடுத்து சென்றவர் கைது!



திருவெண்ணெய்நல்லூர், நவ.11

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள பேரங்கியூர் கிராமத்தைச் சேர்ந்த காசிலிங்கம் மகன் அய்யனார் (31) இவர் தனது டூவீலரில் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் பாக்கெட் விற்பனை செய்வதற்காக எடுத்துச் சென்றபோது ஆலங்குப்பம் தரைப்பாலத்தில் வாகன சோதனை ஈடுபட்டிருந்த திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அன்பழகன் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த இவரை பிடித்த விசாரிக்கும் போது ஹான்ஸ் பொருள் எடுத்து வருவது தெரிய வந்தது. உடனடியாக இவரை கைது செய்து வழக்கு பதிவு செய்து இவரிடம் இருந்து 300பாக்கெட்டூவீலரில் பறிமுதல் செய்தனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு பெட்டகத்தினை வழங்கினார். இந்த ஆய்வின் போது இணை இயக்குனர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.சுமதி, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.கீதாஞ்சலி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பாலுசாமி, உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நெருங்கி வரும் கிறிஸ்துமஸ்:
# தயாராகும் உலர் பழங்களால் 200 கிலோ அளவிலான லிக்வர் பிரம்மாண்ட கேக்!





திருப்பத்தூர் நவ.11

திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரிமலை அடுத்த பள்ளக்கனியூர் பகுதியில் உள்ள ஏஆர் தங்கக்கோட்டை தனியார் சொகுசு ஓட்டலில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு லிக்வர் கேக் தயாரிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

17ம் நூற்றாண்டில் பிரிட்டன் நாட்டில் லிக்கர் கேக் அறிமுகம் ஆன நிலையில் இதனை பல்வேறு நாடுகளில் கடைப்பிடிப்பதாகவும் அதே போல் திருப்பத்தூர் மாவட்டத்தில் இரண்டாவது முறையாக உலர் பழங்கள் பயன்படுத்தி 200 கிலோ அளவிலான லிக்வர் கேக் தயாரிக்க திட்டமிட்டு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே ஊறல் போட வேண்டும் என்பதால் தங்கக்கோட்டை ஹோட்டலில் உலர் பழங்கள் மற்றும் ஆல்கஹால் கொண்டு லிக்வர்கேக்மிக்சிங்திருவிழாநடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஏலகிரி மலை ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி கிரிவேலன்,

மற்றும் ஏலகிரி முக்கிய தொழில் அதிபர்கள் பண்டூரா பார்க் மற்றும் செல்பி பாண்ட மற்றும் தங்ககோட்டை ரெசார்ட் விருந்தினர்கள்,

பெண்கள், குழந்தைகள், வாடிக்கையாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் செய்தியாளர்களை சந்தித்து ஹோட்டல் பொது மேலாளர் சசிகுமார் கூறுகையில்

லிக்கர் கேக் மிக்சிங் சேர்மனி பல்வேறு இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள மக்களும் இதனை அறிந்து கொள்ளும் வகையில் இந்த ஏற்பாடு செய்துள்ளோம்.

ஒரு மாத காலம் ஊறல் போட்டு அதில் கேக் செய்து அதனை ஓட்டல் ஊழியர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் வழங்கப்படும் என்றும் அதேபோன்று ஏழை எளிய மக்களுக்கும் வழங்கப்படும்

மேலும் முதல்முறையாக 100 கிலோ கேக் செய்தோம்

இரண்டாவது முறையாக தற்போது 200 கிலோ செய்துள்ளோம்

அடுத்த வருடம் 500 கிலோ அளவிலான கேக் செய்ய திட்டமிட்டுள்ளோம் எனவும் தெரிவித்தார்

மேலும் இதன் அனைத்து ஏற்பாடுகளையும் தலைமை சமையல் நிபுணர் கோபாலகிருஷ்ணன் செய்தார் எனவும் தெரிவித்தார்

# தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் - தாராபுரத்தில் ஆலோசனை கூட்டம்!



திருப்பூர்,நவ.11

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் புறவழிச் சாலையில் உள்ள குமரன் அரங்கில், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் விவசாயிகள் உரிமை மீட்பு, கடன் விடுதலை முதல் மாநாடு குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் சண்முகசுந்தரம் தலைமையில, திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன், கறிக்கோழி பண்ணைசெயலாளர்ஏபிடி மகாலிங்கம், உழவர் சந்தை அணி மாநில செயலாளர் ரமேஷ், மாநில நிதிக்குழு தலைவர் கோனார்பட்டி பாலசுப்பிரமணியம், மகளிர் அணி சித்ரா, லீலாவதி, ஒன்றியச் செயலாளர் கணேசன், குமரேசன், ஈஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தாராபுரம் சட்டமன்ற தொகுதியிலிருந்து 75,000 விவசாயிகள் ஈரோடு விஜயமங்கலம் டோல்கேட் அருகே டிசம்பர் 28, 2025 அன்று நடைபெறும் மாநில மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தாராபுரம் தொகுதியில் யாரை விவசாயிகள் முடிவு செய்கிறார்களோ, அவரே எம்எல்ஏ ஆவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

மாநாட்டில் தமிழகம் முழுவதும் இருந்து 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்கவுள்ளதாகவும், பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்க

முக்கிய கோரிக்கைகள்:

அனைத்து பயிர், நீண்டகால, மத்திய கால, டிராக்டர் கடன்களையும் மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழ்நாடு அரசு ஏக்கருக்கு ரூ.30,000 டற்பத்தி மானியம் வழங்க வேண்டும். உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த விவரங்களைத் தெரிவித்த நிதிக்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியம், “விவசாயிகளின் நலனுக்காகக் கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் விவசாயிகளை ஒன்றிணைக்கும் நோக்கில் இந்த மாநாடு நடைபெற உள்ளது,” என்றார்.